கடலூர் மேற்கு மாவட்டம் , பண்ருட்டி சட்டமன்ற தொகுதி நிர்வாகிகள் கூட்டம், மாவட்ட அவைத்தலைவர் டாக்டர் கொ. நந்தகோபாலகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது. தலைமை செயற்குழு உறுப்பினர் ஒன்றிய கழக செயலாளர் வி .கே. வெங்கட்ராமன் வரவேற்புரையாற்றினார். பண்ருட்டி நகர நகர கழக செயலாளர் நகர மன்ற தலைவர் கே .இராஜேந்திரன் முன்னிலை வகித்தார். அமைச்சர் சி .வி .கணேசன் சிறப்புரையாற்றினார்.தொகுதி பொறுப்பாளர் ,முன்னாள் எம்.எல்.ஏ ,செ. புஷ்பராஜ், ஆர் .எஸ் .எம். தணிக்கை செல்வம், ஆனந்தி சரவணன், ப.மணிவண்ணன் , ராமு இராமச்சந்திரன், சுந்தரவடிவேல், ஜெயமூர்த்தி, ஆர் .இராதா கிருஷ்ணன் ,உள்ளிட்ட மாவட்ட, ஒன்றிய, நகர ,பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

பேறுகால விடுப்பிற்காக

209 பெண் காவலர்கள் விரும்பிய மாவட்டத்திற்கு மாறுதல்!

முதலமைச்சருக்கு பெண் காவலர்கள் நன்றி!

சென்னை, ஜூன் 16-

மகப்பேறு விடுப்பு முடிந்து பணிக்கு திரும்பும் பெண் காவல் ஆளிநர்களுக்கு, அவர்கள் விரும்பும் மாவட்டத்திற்கு பணியிட மாறுதல் வழங்கப்படும் என்ற முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்ததைத் தொடர்ந்து,

மொத்தம் 209 பெண் காவல் ஆளிநர்கள், தங்களது பேறுகால விடுப்பிற்குப் பிறகு, குழந்தை களை கவனித்துக்கொள்ள ஏதுவாக, மற்ற மாநகரம்/மாவட்டத்திற்கு பணியிட மாறுதல் கேட்டு விண்ணப்பத்திருந்தனர்.

அதன்படி, 03.06.2025 வரை, பணியிட மாறுதல் கோரி விண்ணப்பித்திருந்த மேற்கண்ட 209 பெண் காவலர்களுக்கும் அவர்கள் விரும்பிய மாநகரம்/மாவட்டத்திற்கு பணியிட மாறுதல் வழங்கப்பட்டுள்ளது.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் கனிய உள்ளத்திற்கு பெண் காவலர்கள் தங்களது நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொண்டனர்.



"நான்" என்று சொன்னால்
உதடுகள் ஒட்டுவதில்லை;
" நாம் " என்று சொல்லும்பொழுது
உதடுகள் ஒட்டும்.

...கலைஞர்....

புவனகிரி வட்டம் பெரியகுமட்டி பட்டாசு ஆலையில்

வெடிவிபத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்தாருக்கு ரூ.4 லட்சம் நிதி!

முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு

சென்னை, ஜூன் 16-

கடலூர் மாவட்டம், புவனகிரி வட்டம், பெரியகுமட்டி கிராமத்தில் இயங்கி வரும் தனியார் பட்டாசு ஆலையில் ஏற்பட்ட வெடிவிபத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி அறிவித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

கடலூர் மாவட்டம், புவனகிரி வட்டம், பெரியகுமட்டி கிராமத்தில் இயங்கி வரும் தனியாருக்குச் சொந்தமான பட்டாசு ஆலையில் நேற்று (15.06.2025) காலை சுமார் 11.30 மணியளவில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் புவனகிரி வட்டம், சின்னக்குமட்டி கிராமம், நடுத்தெருவைச் சேர்ந்த திருமதி.லதா குமாரி (வயது 37) க/பெ.மணிவண்ணன் என்பவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகவும் வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இந்த விபத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கும் அவரது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு நான்கு இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

கீழடி அகழ்வாய்வு அறிக்கையை உடனே வெளியிடுக!

மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் எம்.பி. பிரதமருக்கு வலியுறுத்தல்!

சென்னை, ஜூன் 16-

கீழடி அகழ்வாய்வு அறிக்கையை முழுமையாகவும், எவ்வித திருத்தங்கள் இன்றியும் உடனடியாக வெளியிட வேண்டும் என்று பிரதமர் மோடியை கழக மாநிலங்களவை உறுப்பினர் பி.வில்சன் வலியுறுத்தியுள்ளார்.

கழக மாநிலங்களவை உறுப்பினர் பி.வில்சன் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில், ஆர்.எஸ்.எஸ். சித்தாந்தத்தால் இயக்கப்படும் பா.ஜ.க. தலைமையிலான ஒன்றிய அரசு, கீழடியின் முக்கியத்துவத்தை புதைத்து விடத் தீர்மானித்தது போலத் தோன்றுவதாகவும் அவர் கூறியுள்ளார்.

கீழடியில் அகழாய்வுப் பணிகள் 2015 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ப்பட்டன. அதற்கு அறிவியல் பூர்வமான ஆய்வுகள் உறுதுணையாக இருந்தன. ஜனவரி 2023ல் , தொல்லியல் ஆய்வாளர் அமர்நாத் ராமகிருஷ்ணா 982 பக்கங்கள் கொண்ட விரிவான இறுதி அறிக்கையை சமர்ப்பித்தார். இருப்பினும் இந்த அறிக்கையானது தற்போது வரை பொதுவெளியில் வெளியிடப்படவில்லை. ஏன்? ஏனெனில், அந்த அறிக்கை ஆர்.எஸ்.எஸ். சிந்தாந்தத்தால் இயக்கப்படும் பாஜக தலைமையிலான ஒன்றிய அரசால் புனையப்பட்ட கட்டுக்கதைகளை தோலுரிக்கிறது என்று பி.வில்சன் தெரிவித்துள்ளார்.

ஒன்றிய அரசானது கீழடி தொடர்பான அறிவியல் ஆய்வுகளுக்கு நேரம் தேவைப்படுகிறது. ஆகவே தாமதமாகிறது எனத் தொடர்ந்து கூறி வருகிறது. ஆனால், அவர்களுக்குப் பிடித்த பண்பாட்டு வரலாற்றை ஒத்துப்போகும் பிற அகழாய்வு தளங்களுக்கு மட்டும் இந்த கால தாமதம் எங்கே போனது? இந்திய தொல்லியல் ஆய்வு நிறுவனமானது, தாங்கள் பரிந்துரை செய்த திருத்தங்களை தொல்லியல் ஆய்வாளர் செய்திடவில்லை என்கிறது. இருப்பினும், ஆய்வாளர் அமர்நாத் ராமகிருஷ்ணன் தன்னுடைய கண்டுபிடிப்புகளை அறிவியல் பூர்வமான தரவுகளுடன் முன்வைத்தார் என்று குறிப்பிட்டுள்ளார்.

ஒன்றிய அரசு உண்மையாகவே கூட்டாட்சி முறையை மதிக்கிறதானால், கீழடி இந்தியாவின் பெருமையாகக் கொண்டாடப்பட வேண்டும். ஆனால், அதற்கு பதிலாக, சமஸ்கிருதம் தெற்கே வருவதற்கு முன்பே தமிழ் நிலப்பரப்பில் எழுத்து, தொழில் மற்றும் வளமான கலாச்சாரம் இருந்ததை கீழடி நிரூபிப்பதால், அவர்கள் அதைத் தடுத்து, தாமதப்படுத்தி, கேள்விக்குள்ளாக்குகின்றனர். இந்த தாமதம் தற்செயலானது அல்ல என்று வில்சன் குறிப்பிட்டுள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஒன்றிய அரசின் திட்டமிட்ட தாமதத்தை சரியான வகையில் அடையாளம் காட்டி, அவர்களின் இரட்டை வேடத்தை அம்பலப்படுத்தி, தமிழர் தொன்மையின் மறுக்க முடியாத சான்றாக கீழடி விளங்குவதை பறைசாற்றியுள்ளதை சுட்டிக்காட்டியுள்ள பி.வில்சன், வரலாறானது சிதைந்த தடயங்களின் வழியாக உண்மைகளை வெளிக்கொணரும்போது, ஒன்றிய அரசு அதை மறைக்க முயற்சிக்கலாம். ஆனால் அந்த உண்மையை நிரந்தரமாக மறைக்க முடியாது. கீழடி எழும் — அதன் மூலம் தமிழர் பெருமையும் எழும். கீழடி அகழ்வாய்வு அறிக்கையை முழுமையாகவும், எவ்வித திருத்தங்கள் இன்றியும் உடனடியாக வெளியிட வேண்டும் என்று பிரதமர் மோடியை கேட்டுக்கொள்வதாகவும் திமுக மாநிலங்களவை உறுப்பினர் பி.வில்சன் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில் தெரிவித்துள்ளார்.

வைகை அணையில் இருந்து

மதுரை, திண்டுக்கல் மாவட்ட பாசனத்திற்காக தண்ணீர் திறப்பு!

தேனி, ஜூன் 16-

வைகை அணையில் இருந்து பெரியாறு பிரதான கால்வாயின் கீழுள்ள இரு போக பாசன நிலங்களுக்கு தண்ணீர் திறக்க தமிழக அரசு உத்தரவு பிறப்பித்தது.

தேனி மாவட்டம் ஆண்டிபட்டி அருகே உள்ள வைகை அணையில் இருந்து பெரியாறு பிரதான கால்வாயின் கீழுள்ள இரு போக பாசன நிலங்களின் முதல் போக சாகுபடிக்காக,

வரும் அக்டோபர் 12ந்தேதி வரை தண்ணீர் திறக்க தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

விநாடிக்கு 900 கன அடி வீதம் முதல் 45 நாட்களுக்கு முழுமையாகவும்,

அடுத்த 75 நாட்களுக்கு முறை வைத்தும் என 120 நாட்களுக்கு அணையின் நீரிருப்பைப் பொறுத்து திறக்கப்பட உள்ளது.

இதன் மூலம் மதுரை, திண்டுக்கல் மாவட்டங்களில் உள்ள 45,041 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்.

ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ.பெரியசாமி, பத்திர பதிவுத் துறை அமைச்சர்மூர்த்தி ஆகியோர் கலந்துகொண்டு வைகை அணையில் இருந்து 900 கன அடி தண்ணீர் திறந்து வைத்தனர்.

வைகை அணையில் உள்ள பெரிய ஏழு மதகு வழியாக திறக்கப்பட்ட தண்ணீருக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

இவர்களுடன் தேனி மாவட்ட ஆட்சித் தலைவர் ரஞ்சித் சிங் திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் சரவணன்

மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் சங்கீதா மற்றும் தேனி வடக்கு மாவட்ட செயலாளர் உறுப்பினர் தங்க தமிழ்ச்செல்வன் எம் பி . சரவணகுமார்எம் எல்ஏ. மகாராஜன் எம் எல் ஏ. தெற்கு மாவட்ட செயலாளர் கம்பம் ராமகிருஷ்ணன்எம் எல் ஏ. ஆகியோர்கள் கலந்து கொண்டனர்.

வைகை அணையின் மொத்த கொள்ளளவு 71 அடியாகும் தற்போது வைகை அணையின் நீரின் அளவு 61.22 அடியாக உள்ளது.

வைகை அணையின் நீர் இருப்பு 3,841 மில்லியன் கனடியாக உள்ளது.

வைகை அணைக்கு நீர்வரத்து 1,230 கன அடியாக உள்ளது.வைகை அணையில் இருந்து மதுரை தேனி திண்டுக்கல் ராமநாதபுரம் சிவகங்கை ஆகிய ஐந்து மாவட்டத்திற்கு குடிநீருக்காக 69 கன அடி தண்ணீர் வெளியேற்றப்பட்டு வருகிறது.

நிகழ்ச்சியில் தெற்கு மாவட்ட துணை செயலாளர் செந்தில், தேனி வடக்கு ஒன்றிய செயலாளர் சக்கரவர்த்தி, மீனவர்அணி வாரிய உறுப்பினர் முருகன், தெற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்செஞ்சூரி செல்வம், மதுரை தெற்கு மாவட்ட துணை செயலாளர் பாலாஜி, உசிலம்பட்டி வடக்கு ஒன்றிய

செயலாளர் அஜித் பாண்டி, மேற்கு ஒன்றிய செயலாளர் எம்.பி.பழனி, தெற்கு ஒன்றிய செயலாளர் முருகன், செல்லம்பட்டி வடக்கு ஒன்றிய செயலாளர் சுதாகரன், சேடபட்டி சேர்மன் ஜெயச்சந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

துறைமுகத்தில் அறுசுவை உணவு வழங்கல்!

சென்னை, ஜூன் 16–

சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு, வெவ்வேறு இடங்களில் அன்னம் தரும் அமுதகரங்கள் சிறப்புமிகு திட்டத்தின் 115வது நாள் துறைமுகம் தொகுதி – இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு உணவு வழங்கினார்.

தமிழ்நாடு முதலமைச் சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு "அன்னம் தரும் அமுதக்கரங்கள் மாபெரும் திட்டத்தின் 115 ஆம் நாளான – கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்தநாளை முன்னிட்டு நேற்று முன்தினம் (14.6.2026) துறைமுகம் தொகுதி: 1) துறைமுகம் கிழக்கு பகுதி வட்டம் 56 சண்முகராயன் தெரு தையப்பன் தெரு சந்திப்பு. 2) துறைமுகம் மேற்கு பகுதி வட்டம் 54 ஆ அம்மன் கோயில் தெரு, கிருஷ்ணப்பா, குளத் தெரு (ஆட்டோஸ்டேண்டு) அருகில், சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு "தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தர மாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் – இதுதான் ஒரே இலக்கு! என்ற உறுதிமொழியை ஏற்று பொது மக்களுக்கு காலை உணவு வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் பெருநகர சென்னை மேயர் பிரியா ராஜன், எஸ்.முரளி, எஸ்.இராஜசேகர், இசட். ஆசாத், பி.ஸ்ரீராமுலு, ஜி.எம். தேவன், எம்.விஜயகுமார், என்.பி. எம்.ஷேக்அப்துல்லா, இப்ராஹிம் கனி, ஆர்.கலைச்செல்வி, பி.விஜய குமார், எல்.சம்பத்குமார், பா.பிரதாப் குமார், எம்.விநாயகம், ப.ஜெகதீஷ் துறைமுகம் கிழக்கு / மேற்கு வட்ட கழக செயலாளர்கள்: எல்.சத்தியநாராயணன், எஸ்.புகழேந்தி மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்
ஒப்பந்தப்புள்ளி அழைப்பு–இரண்டு உறை முறையில் இணம் வாரியாக மின்னணு ஒப்பந்தம் முறையில்

ஒப்பந்தப்புள்ளிகேட்பு எண்	10/கோ. மறுசீரமைப்புப் பணிகளின்–ஈரோடு– கரூர் /முவ.அ (வ6)/தபொ/கோவை /2025/ நாள். 10.06.2025
நிதி ஆதாரம்	மறுசீரமைப்பு நிதி 2025–26
ஒப்பந்தக்காரர் தகுதி	முதல் வகுப்பு ஒப்பந்தக்காரர்கள்
ஒப்பந்தப்புள்ளி வரவேற்பவர்	தலைமைப் பொறியாளர், த.கு.வ.வாரியம், 30–சிறுவாணி நகர், பாரதி பூங்கா சாலை, கோயம்புத்தூர்–641043.
ஒப்பந்தப்புள்ளி பதிவிறக்கம் இணையதளம் மூலமாக	**19.06.2025** முதல் **03.07.2025** பிற்பகல் **15.00** மணி வரை **https://tntenders.gov.in** (As per server time)
ஒப்பந்தபுள்ளி முன் வைப்புத் தொகை	மின்னணு முறையில் இணையதளம் "**https://tntenders.gov.in**" மூலமாக
ஒப்பந்தப்புள்ளி முன் ஆய்வுக் கூட்டம்	**26.06.2025** அன்று முற்பகல் **11.00** மணிக்கு தலைமைப் பொறியாளர் அலுவலகம், த.கு.வ.வாரியம், 30–சிறுவாணி நகர், பாரதி பூங்கா சாலை, கோயம்புத்தூர்–641043.
ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்தல்	**03.07.2025** அன்று **15.00** மணிக்குள் மின்னணு ஒப்பந்த முறையில் டிஜிட்டல் ஒப்பம் இடப்பட்டு இணையதளம் **https://tntenders.gov.in** மூலமாக.
ஒப்பந்தப்புள்ளி திறப்பு	**04.07.2025** அன்று பிற்பகல் **15.30** மணிக்கு வ.எண்–01, **15.45** மணிக்கு வ.எண்–02 மற்றும் **16.00** வ.எண்–03 மணிக்கு தலைமைப் பொறியாளர் அலுவலகம், த.கு.வ.வாரியம், 30–சிறுவாணி நகர், பாரதி பூங்கா சாலை, கோயம்புத்தூர்–641043 மின்னணு ஒப்பந்த முறையில் திறக்கப்படும்.

வ. எண்	திட்டத்தின் பெயர்	பணியின் உத்தேச மதிப்பு (ச.உ.சேவை வரி 18 சதவீதம் உட்பட.)	முன் வைப்புத் தொகை
	ஈரோடு மற்றும் கரூர் மாவட்டங்களில் தற்போதுள்ள கூட்டுக் குடிநீர் திட்டத்தினை 2025–26 ஆம் ஆண்டுக்கான மறுசீரமைப்பு திட்டத்தின் கீழ் செயல்படுத்துதல். (கட்டுமான பணி காலம் 06 மாதங்கள், சோதனை ஓட்டம் – 1 மாதம் மற்றும் கட்டணமில்லா பராமரிப்பு காலம் : 1 மாதம்)		
1.	ஈரோடு மாவட்டம் நல்லம்பட்டி பேருராட்சி, பள்ளபாளையம் பேருராட்சி, காஞ்சிகோயில் பேருராட்சி, பெத்தம்பாளையம் பேருராட்சி மற்றும் பெருந்துறை, பவானி ஒன்றியங்களில் உள்ள 4 பிற கிராம குடியிருப்புகளுக்கான, கூட்டுக் குடிநீர் திட்டத்தில் வெவ்வேறு விட்டம்முள்ள PSC/AC/PVC குழாய்களை DI/OPVC/HDPE குழாய்களாக மாற்றுதல், குழாய் தாங்கும் பாலம் அமைத்தல் மற்றும் நீர் சுத்திகரிப்பு நிலைத்தில் HSC பம்ப்செட்டை மாற்றுதல்.	ரூ. 3.26 கோடி	ரூ. 2.45 இலட்சம்
2.	ஈரோடு மாவட்டம், கூகலூர் பேருராட்சி, அத்தானி பேருராட்சி மற்றும் அந்தியூர் மற்றும் கோபிசெட்டிப்பாளையம் ஒன்றியத்தில் உள்ள 5 பிற கிராமப்புற குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டத்தில் AC குழாயை O-PVC மற்றும் HDPE குழாய்களாக மாற்றுதல், மின் இயந்திரப் பணிகள் மற்றும் மிதமனல் வடிகட்டி தொட்டிகளில் பழுது பணிகள் செய்தல்.	ரூ. 2.05 கோடி	ரூ. 1.54 இலட்சம்
3.	கரூர் மாவட்டம் பள்ளப்பட்டி நகராட்சி மற்றும் அரவக்குறிச்சி பேருராட்சி கூட்டுக் குடிநீர் திட்டத்தில் அரவக்குறிச்சி தரைதள தொட்டி முதல் பள்ளப்பட்டி தரைதள தொட்டி வரை 350 மிமீ PSC குழாயை 315 மிமீ O-PVC குழாய்களாக மாற்றுதல் மற்றும் நீர் சேகரிப்பு கிணற்றில் 160 மீட்டர் (4 எண்ணம் தலா 40 மீட்டர்) நீளமுள்ள ரேடியல் ஆர்ம்களை அமைத்தல்.	ரூ. 3.25 கோடி.	ரூ. 2.44 இலட்சம்

செ.ம.தொ.இ/ 3030 /ஒப்பந்தப்புள்ளி/2025
தலைமைப் பொறியாளர் (பொ), த.கு.வ.வாரியம், கோவை.
தேவை இத்தருணம் – குடிநீர் சிக்கனம்

அரியலூர் மாவட்டம் ஆண்டிமடம் ஒன்றியம் தேவனூர் கிராமத்தில் முன்னாள் எம்.பி எஸ்.சிவசுப்பிரமணியன் அவர்களின் ஆறாம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு அவரது திருவுருவப் படத்திற்கு தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், ஆலத்தூர் முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர் , ஒன்றிய கழக செயலாளர் என்.கிருஷ்ணமூர்த்தி, சிவராஜேஸ்வரி சிவசுப்ரமணியன், கழக சட்டத்திட்ட திருத்தக்குழு இணை செயலாளர் சுபா.சந்திரசேகர், சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், தலைமை செயற்குழு உறுப்பினர் எம்.பி.பாலசுப்ரமணியன் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள் பலரும் கலந்துகொண்டு மாலை அணிவித்து, மலர்தூவி புகழஞ்சலி செலுத்தினார்கள்.

முத்தமிழ் அறிஞர், செம்மொழி நாயகர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு கடலூர் சிங்காரத்தோப்பில் இலவச கண் சிகிச்சை முகாமிக்கு கடலூர் சட்டமன்ற உறுப்பினர் கோ.ஐயப்பன் தலைமை தாங்கி தொடங்கி வைத்தார். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை டாக்டர் பிரவின் ஐயப்பன் செய்திருந்தார். இந்த முகாமில் 500 க்கும் மேற்பட்ட பொதுமக்கள் ஆர்வமுடன் கலந்து கொண்டு கண் பரிசோதனை செய்து கொண்டனர். அப்போது 250 க்கும் மேற்பட்டோருக்கு கண் கண்ணாடி போடுவதற்கு பரிந்துரை செய்த நிலையில், டாக்டர் பிரவீன் ஐயப்பன் தனது சொந்த செலவில் கண் கண்ணாடி வழங்கினார். மேலும் 40 க்கும் மேற்பட்ட நபர்களுக்கு அறுவை சிகிச்சை செய்வதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளார். இதில் ஆதி பெருமாள் ரவிச்சந்திரன், ராஜசேகர், கர்ணன், கீர்த்தனா ஆறுமுகம், ராதிகா பிரேம்குமார், சுதாகர், சன்பிரைட் பிரகாஷ், ராமநாதன், பிரகாஷ், சம்பத், மார்க்கெட் பிரகாஷ், நடராஜன், நாகூரான், கலைமணி, மதன்ராஜ், ரவி, அரவிந்த், சதீஷ், யுவராஜ் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.